# மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

***முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்***
உதவிப் பேராசிரியர்
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி
ரஹ்மத் நகர், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6447

***முன்னுரை***

*பெற்றோரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் பிள்ளைகள் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் அவர்களுடைய பெற்றோரின் வளர்ப்பினைப் பொறுத்தே அமைகின்றது எனலாம். குழந்தைகளை பெற்றோர்கள் நல்ல முறையில் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதன் மூலம் குழந்தைகளும் இச்சமுகத்தில் தம்மை ஒரு பண்புள்ளவனாக அடையாளப்படுத்த முடியும். அவ்வகையில் ஒவ்வொரு குழந்தைகளும் தம்முடைய பெற்றோர் வியக்கும் வண்ணம் அவர்களுக்கு உதவ வேண்டுமெனில், தம்மை ஒரு சான்றோனாக்கி அவர்களுக்கு பெருமை கேக்க வேண்டும். ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்னும் மகனின் உதவியாக வள்ளுவர் சான்றோனாக வேண்டும் என வலியுறுத்ததுகின்றார். இத்தலைப்பினை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.*

**மகனின் உதவி**

ஒரு மகனானவன் தந்தைக்கு எத்தகைய உதவியினைப் புரிய வேண்டும் என்பதனை வள்ளுவப் பெருந்தகை,

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**ஏன்நோற்றான் கொல்எனும் செல்" *(கு.எ.70-)***

என்கிறார். ஒரு மகன் தன் தந்தைக்கு செய்ய வேண்டிய உதவி என்னவென்றால் இப்பிள்ளையைப் பெற இத்தந்தை என்ன தவம் செய்தானோ என்று பிறர் சொல்லும் சொல்லினை உண்டாக்குவதாகும்.

இதனையே ஆங்கிலத்தில், "(so to act), that it may be said "by what great penance did his father beget him" is the benefit which a son should gender to his father"

ம.பீட்டர் (தொ. அ) - திருக்குறள்)

என்று மொழிபெயர்க்கின்றனர்.

ஒரு மகன் சான்றோனாகி தந்தையைப் பெமைப்படுத்த வேண்டும் எனில், அத்தந்தை தன் மகனை சான்றோன் ஆக்குவதை கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். என்பதனை புறநானூறு,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோர் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" *(புறநானூறு 312)***

என்ற பாடலானது மகனைப் பெற்று அவனைப் பாதுகாத்தல் தாயின் கடமையாகும்.

*அவனைத் தன் குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி அதனைப் பெறுவதற்குரிய அறிவு அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் அறிவில் நிறைந்தவனாக ஆக்குதல் தந்தைக்குக் கடமையாகும்.*

*வீரச் சமுதாயத்தில் ஒரு தந்தை தன்னுடைய மகன் வீரத்தால் நிரம்பியவனாய் விளங்குவதையே விரும்புவான். சமுதாயத்தின் தேவைக்களுக்கு ஏற்ப அவனை அக்கலைகளில் நிரம்பப் பெற்றவனாய் உடருவாக்குதல் தந்தையின் கடமையாகும். மகனறிவு தந்தையின் அறிவாயினும்,*

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது"**

***(கு.எ..68)***

*தம்மக்கள் தம்மைவிட அறிவுடையவராய் இருத்தல் தனக்கு மட்டுமின்றி, இவ்வுலகில் வாழும் யாவர்க்கும் இனிதாக இருத்தலின், அவனைக் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்கள் நிரம்பப் பெற்றவனாக உருப் பெறுவதற்குரிய சூழல்களைத் தருதல் தந்தையின் கடமையாகும்.*

*மகன் தந்தைக்கு உதவுவது போல, தந்தைக்கு மகன் நன்றியோடு விளங்க வேண்டுமெனில்,*

**"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"**

***(கு.எ:67)***

*என்று வள்ளுவர் கூறுகின்றார்.*

## *திருஞானசம்பந்தர்*

*மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாகிய சான்றாண்மையை தம்முடைய மூன்று அகவையிலேயே நிரூபணமாக்கிக் காட்டியவர் திருஞானசம்பந்தர் ஆவார்.*

*சைவமும் தமிழும் செய்த தவப்பயனாய்த் தோன்றிய ஆகிடைய பிள்ளையாகிய ஞானசம்பந்தன் சிவனடியே சிந்திக்கும் திருப்பெறு சிவஞானமும் பிறப்பினை அறுக்கும் பாங்கில் ஓங்கி உயர்ந்த உவமையற்ற கலைஞனமும் உயர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்று மூன்றாம் அகவையிலேயே சிறந்து விளங்குகின்ற சம்பந்தரை அவர் தம் தந்தையாரான சிவபாத இருதையார் நீராடத் தம்முடன் அழைத்துச் சென்றார்.*

*குளக்கரையில் மகனினை அமரச் செய்து குளத்திற்குள் நீராடச் சென்றார். நீரினுள் மூழ்கி நீராடப் புகுந்தார் அந்நிலையில் "அகமருஷண ஸ்னாம்" என்ற நிலையில் நீரனுள் மூழ்கி இருந்தபடியே மந்திரங்களை மனதினுள் கூறிக் கொண்டிருந்தார்.*

*நீரினுள் மூழ்கிய தந்தையைக் கானாத குழந்தை திருக்கோயிலின் சிகரத்தைப் பார்த்து அம்மா ! அப்பா எனஅழ கட்டு மலை போலுள்ள சந்நிதியில் விற்றிருக்கும் தோணியப்பர் உமையுடன் இடப வாகனராய்க் குழந்தை முன் தோன்றினர். அம்மையும் தம் முலைப் பாலினை ஒரு பொற்கிண்ணத்தில் கறந்து அதில் சிவஞானத்தை இணைத்தும் குழைத்தும் அழுத பிள்ளைக்கு ஊட்டினார். பின்னர் மறைந்தனர்.*

*ஞானம் தொடர்பு கொண்டதால் ஞானக் குழந்தை ஆயிற்று.*

*நீராடி கரை வந்த இருதயர் குழந்தையின் வாயினின்றும் ஒழுகிய பால் திவலைகளைக் கண்டு ஐயமும் அதிர்ச்சியும் உற்று கோலினை எடுத்து அரட்டி பாலினை யார் கொடுத்தது என வினவினார்.*

*எம்பெருமான் இறைவனின் திருவுருவினைச் சிவக்கன்றான ஞானசம்பந்தர் சுட்டிக்காட்டித் தமிழ்த் திருமுறையைத் தொடங்குகின்றார்.*

**"தோடு உடைய செவியன் விடைஏறி**
**ஓர் தூவெண் மதி சூடிக்**
**காடு உடைய சுடலைப் பொடிபுசி என்**
**உள்ளம் கவர் கள்வன்**
**ஏரு உடைய மலரான் முனைநன்**
**பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடு உடைய பிரமாபுரம் மேவிய**
**பெம்மன் இவன் அன்றே"**

***(தேவாரம் பா.எ.1)***

*என்கிறார். தோடு என்னும் செவிக்கு அணியும்*

அணியை அணிந்துள்ள உமையம்மையை இடப்பக்கம் கொண்ட சிவபிரான், இட வாகனத்தில் ஏறி, தூய்மையான வெண்மதியைச் சூடி, திருவெண்ணீறு புசிய திருமேனி பொலிய விளங்குபவர், என் உள்ளம் கவர் கள்வாராவார். அப்பிரான் நான்முகனின் வழி பாட்டினை ஏற்று அருள் செய்தவர் அவரே எனக்குக் காட்சி தந்தவர்.

இவ்வாறு மூன்று வயதிலேயே தேவாரம் பாடி தம்முடைய தந்தைக்குப் பெருமை சோக்கும் விதமாய் சான்றோனாய்த் திகழ்ந்தவர் திருஞானசம்பந்தராவார்.

*4169* - பாடல்களைப் பாடி முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுத்து தேவாரப் பண்ணினைத் தமிழுக்கு உகந்தளித்த பெருமை ஞானசம்பந்தரை சாரும்.

**பாரதியார்**

இளம் வயதிலேயே மிக்க அறிவுடையவராய்த் திகழ்ந்தவர் பாரதி என்பது அனைவரும் அறிந்ததே அதற்கு சான்றாய் ஓர் நிகழ்வினைக் கூறலாம்.

எட்டயபுரத்து அரசவையில் காந்திமதி நாதன் என்ற புலவர் இருந்தார் அப்போதைய புகழ் பெற்ற கவி அவர்தான். பாரதி அப்போது சிறுவனாக இருந்த போதும் சமஸ்தானத்தில் அவரது பால்கள் வெகு வேகமாக புகழ் பெற்றிருந்தது. காந்திமதி நாதனுக்கு பாரதியன் மீது கொஞ்சம் பொறாமை இருந்தது.

அரசரும் பாரதி மீது மிக்க அபிமானம் கொண்டிருந்தார். இதுவும் கூட காந்திமதி நாதனுக்குப் பிடிக்கவில்லை. அவர் பாரதியை மட்டம் தட்ட காத்திருந்தார் அதற்கு ஒரு வாய்ப்பும் வந்தது. அரசவையில் ஒருநாள் புலவர்களுக்கு போட்டி நடந்தது.ஈற்றடி மட்டும் சொல்லி விடுவார்கள். பாடலை அந்த வரியில் முடிக்க வேண்டும்.

பாடலை பாடுபவர்களுக்கு வேறொருவர் கடைசி வரி சொல்ல வேண்டும். பாரதிக்கு கடைசி வரி சொல்லும் வாய்ப்பு காந்திமதி நாதனுக்கு கிடைத்தது. நல்ல வாய்ப்பை பயன்படுத்தாமல் இருப்பாரா கந்திமதிநாதன் பாரதியாருக்க கொடுத்த ஈற்றடி "பாரதி சின்னப்பயல்" அவையில் சொல் என்ற சிரிப்பு.

இதை சிறுவனான பாரதி எப்படிப் பாடப் போகிறார் என்று அரசரும் ஆவலுடன் இருக்க பாரதி பாடினார்,

**"ஆண்டில் இளையவனென் றந்தோ**
**அகந்தையினால்**
**ஈண்டிங் கிகழ்ந்தென்னை ஏனஞ்செய்**
**மாண்பற்ற**
**காரிருள்போ லுள்ளத்தன்**
**காந்திமதிநாதனைப்**
**பாரதி சின்னப்பயல்"**

தன்னை விட வயதில் இளையவன் நான் என்ற அகந்தையால் என்னை இகழ்ந்து ஏளனம் செய்த பெருமையற்ற கருமையான இருள் போல உள்ளங்கொண்ட காந்திமதி நாதனைப் பார்த்து. மிகவும் சின்னப்பயல் (பார் அத சின்னப் பயல்)

அவையினர் கரவொலிக்க, காந்திமதிநாதன் அவமானத்தால் குறுகிப் போகிறார். இதை கவனித்த பாரதி அவரை மகிழ்வுற வைக்கவும். அடடா சிறியவன் நான் பெரியவரை அவமதித்து விட்டோமே என்ற சிறு குற்ற உணர்வினும் அந்தப் பாடலை சற்றே மாற்றிப் பாடுகிறார்.

**"ஆண்டில் இளையவனென் றந்தோ**
**அருமையினால்**
**ஈண்டு இன்றென்னை நீ ஏந்தினையால்**
**மாண்புற்ற**
**காராது போ லுள்ளத்தன்**
**காந்திமதி நாதற்குப்**
**பாரதி சின்னப்பயல்"**

ஆண்டில் இளையவன் என்ற அருமையினால் ஈண்டு இன்று என்னை நீ ஏந்தினையால் மாண்புமிக்க தார் அது போல் உள்ள்ங்கொண்ட காந்திமதி நாதனுக்கு பாரதி சின்னப்பயல்.

கருணை மிக்க காந்திமதி நாதனுக்கு முன் பாரதியான நான் சின்னப்பயல் என்ற

அர்தத்தில் படியதும் காந்திமதி நாதனே ஓடி வந்து பாரதியைத் தழுவிக் கொண்டார்.

இவ்வாறு இமையிலேயே அவையோர் போற்றும் சன்றோனாக பாரதி திகழ்ந்து "மகன் தந்தைக் காற்றும் உதவி" என்ற குறளின் மையக் கருத்தினை நிலை நாட்டுகின்றான்.

தமது ஏழாவது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கிய அவருக்கு பதினோரு வயதான போது அவரது கவிபாடும் ஆற்றலையும் புலமையையும் வியந்து பாராட்டி, அவருக்கு கலைமகள் என்று பொருள்படும் "பாரதி" என்ற பட்டத்தினை எட்டயபுர மன்னர் வழங்கினார். அன்றிலிருந்து சுப்பிரமணிய பாரதி என்றானது.

## முருகன்

முருகனை தகப்பன் சுவாமி அல்லது சுவாமிநாதன் என்பார்கள். அதாவது தந்தைக்கே குருவானவர் என்று அர்த்தம். சுவாமி மலைக்கு அப்படி பெயர் வந்ததன் காரணக் கதை ஒன்று உண்டு. ஒரு முறை கைலாயத்திற்குச் சென்ற முருகனை பிரம்மா அவமத்து விட்டார். எனவே அவருக்குப் பாடம் புகட்ட எண்ணிய முருகன் பிரம்மாவிடம் பிரணவ மந்திரமான ஓம் என்பதற்கு அர்த்தம் தெரியுமா என்று கேட்டார். பிரம்மாவினால் அதற்கு பதில் கூற முடியாததால் அவர் தலையில் ஓங்கி அடித்து அவரை சிறையில் அடைத்தார் .

பிரம்மா சிறை வைகப்பட்டதால் படைப்புத் தொழில் நின்று விட சிவபெருமானே முருகனை சந்தித்து பிரம்மாவை. விடுவிக்க வேண்டி தனக்கு பிரணவத்தின் பொருளை உபதேசிக்குமாறு வேண்டவும் முருகப்பெருமான் தனக்கு சிஷ்யனாக இருந்து தன் முன்னால் கைக்கட்டி நின்றால் பிரணவப் பொருளை உரைக்கிறேன் என்றார். சிவபெருமானும் அதற்கு சம்மதம் கூறி முருகன் முன்பு மண்டியிட்டு நிற்கவும் பிரணவப் பொருளை உரைத்தார் முருகன்.

இவ்வாறு தம்மினும் தம்மக்கள் அறிவுடைமை என்பதனை அறிய முடிகின்றது. இதனை கந்தர் கலி வெண்பா,

***விடுக்கதி என்று உயப்ப அதன் மதிவர்ந்து என் திக்கும்***
***நடத்தி விளையாடும் நாதர்- படைப்பேன்***
***அகந்தை உரைப்ப மறை ஆதி எழுந்தன்று உகந்த பிரணவத்தின் உண்மை -புகன்றிலையால்***
***சிட்டித்தொழிலதனைச்செய்வதெங்ஙன் என்றுமுமை***
***குட்டிச் சிறை இருந்துங் கோமானே! மட்டவிழும்***
***பொன்னக் கடுங்கைப் புரிசடையோன்***
***முன்னம் பிரமம் மொழிந்தானே?***

***(கந்தர் கலிவெண்பா பா.எண் 90-93)***

என்று கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு சிறு வயதிலேயே முருகன் தந்தையை விட அறிவுடையோனாய் விளங்கியமையை அறிய முடிகின்றது.

## முடிவுரை

ஒரு தந்தை தன் மகனை சான்றோன் ஆக்க மிகவும் கஷ்டப்பட்டு பலவற்றைக் கற்றுத் தருகிறார். அதற்கான சூழலை அமைத்துத் தருகிறார். எப்பொழுதும் ஊக்கப்படுத்துகிறார். தவறு செய்யும் பொழுது சரி செய்கின்றார். தன் தந்தையின் அனுபவத்தை மகன் பெறுதால் அவன் வாழ்வில் தவறுகள் இழைக்காமல் முன்னேறிச் செல்கின்றான். அத்தகையத் தந்தைக்கு உதவியாய் மகன் என்ன செய்ப வேண்டுமெனில் இவனுடைய தந்தை என்ன தவம் செய்து இவனை பெற்றானோ என்று பிறர் எண்ணி சொல்லும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். அவ்வகையில் தந்தையை சிறப்புறச் செய்தவர்கள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. *கலியாண சுந்தரையர் எஸ் - திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா நகர அச்சகம், மதுரை ரோடு திருச்சி ராப்பள்ளி, முதற்பதிப்பு- மார்ச் 1949*
2. *நடராசன். பி.ரா - திருஞான சம்பந்தர் சுவாமிகள், தேவாரம் -முதல் பகுதி, உமா பதிப்பகம் 171 (புதிய எண் 18), பவளக்காரத்தெருமண்ணடி, சென்னை, நான்காம் பதிப்பு - ஆகஸ்ட் 2016.*
3. *பாலசுப்பிரமணியன். கு.வே- புறநானூறு -2, நிறுசெஞ்சரி புக் ஹவுஸ்(பி)லிட், 41 பி சிட் கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை, ஆறாம்பதிப்பு அக்டோபர் 2017*
4. *பீட்டர் (தொ. ஆ) - திருக்குறள், கண்ணதாசன் பதிப்பகம் 23 கண்ணதாசன் சாலை, தியகராய நகர் சென்னை, மூன்றாம் பதிப்பு - ஜூலை - 2018*